**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை - 600 025.**

**இளநிலைத் தமிழியல் - பட்டம் (B.A. TAMILOLOGY - Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF - LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் - திசம்பர் 2017**

**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு - 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பழமொழி நானூற்றின் ஆசிரியர் யார்?
2. யாரை அறிஞர் என்கிறோம்?
3. குறியிடம் கூறல் என்ற துறையின் பொருள் யாது?
4. மீனாட்சி பிள்ளைத்தமிழ் எந்த மன்னர் காலத்தில் அரங்கேற்றப்பட்டது?
5. நோய்கள் யாரிடம் விரைவாக வந்து சேரும்?
6. எப்போது கடல் அலை பொங்கி எழுகிறது?
7. மதங்கியர் என்போர் யார்?
8. தமிழில் முதல் சதக நூல் எது?
9. மாலைப்பொழுதை எப்படி கழிக்க வேண்டும்?
10. எச்செல்வத்தால் பயன் இல்லை?
11. திருக்கோவையாரின் ஆசிரியர் யார்?
12. உலா இலக்கியத்தை முதலில் கூறிய நூல் எது?
13. நண்டுக்கு எமன் யார்?
14. ஒருவரை கல்வியாளர் என எதை வைத்து அறிய முடியும்?
15. கலப்பகம் என்ற சொல்லின் பொருள் யாது?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. சான்றோர் இயல்பு எத்தகையது?
2. பிற்கால அறநூல் எவை?
3. மடல் இலக்கிய போக்கு பற்றி எழுதுக.
4. பரணி பெயர் காரணம் தருக.
5. இனியவை நாற்பது பற்றி எழுதுக.
6. பாரதியின் புதிய ஆத்திச்சூடி பற்றி எழுதுக.
7. சங்க இலக்கியத்தில் தூது பற்றி எழுதுக.
8. பிள்ளைத்தமிழ் இலக்கணம் வரைக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) நாயன்மார்களின் வாழ்வியலை விவரிக்க.

(அல்லது)

(ஆ) உலக நீதியில் இடம்பெறும் நீதிக்கருத்துக்களைத் தொகுத்து வழங்குக.

2. (அ) குற்றால குறவஞ்சி பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) அபிராமி அந்தாதி பற்றி விவரிக்க.

3. (அ) சிறுபஞ்சமூலம் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) கோவை இலக்கியம் பற்றி விளக்குக.

***